கூட்ட எண் 31 நகராட்சி அலுவலகம்,
2021 – 2022–ம் ஆண்டு ஆரணி,
நாள்:28.02.2022

2022–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2022–ந் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2022 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2022 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்: 1**
ஆரணி நகராட்சியில் இயங்கும் ஈர்ப்பு ஊர்தி எண்:TN25 AU 6961. வாகனத்தின் டிங்கரிங், எலெக்ட்ரிக் ஒயர்கள், என்ஜின் டயர்கள், கிளாச், இன்ஜின் ஆயில் மற்றும் சஸ்பன்சர் பழுதுகள் சரிசெய்ய ஓட்டுநர் திரு.T.நாகேந்திரன் என்பவர் மனு அளித்துள்ளார். மேற்படி வாகனம் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.93000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920– பிரிவு 15ன் கீழ் பணி மற்றும் செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.101/2022/இ1)

**பொருள் எண்: 2**
ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றதற்கு வாக்கு எண்ணும் மையமான ஒழுங்குமுறை விற்பனை கூடம் மில்லர்ஸ் ரோடு சபியுல்லா தெரு, வந்தவாசி ரோடு, சேத்பட் ரோடு, ஆகிய பகுதிகளில் மண்மேடுகளை அகற்றியும் கால்வாய்கள் தூர்வாரியதற்கும் தனியார் JCB இயந்திரம் கொண்டு பணிசெய்தமைக்கு ரூ. 187200/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். தேர்தல் பணி என்பதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
**கோப்பு எண். 766/2020/எச்1**

**பொருள் எண்: 3**

ஆரணி நகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் அம்மா உணவகம் சாம்பார் டோக்கன் முடியும் தருவாயில் உள்ளதால் (1000 ரசிதுகள் கொண்ட ஒரு புத்தகம்) எண் –1/– முதல் 100000/– வரை 100 புத்தகங்கள் கொண்ட இரசீது அச்சடித்து வழங்க அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான செயலாளர், தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ 107, முதல்மாடி, என்.எஸ். காம்ப்ளெக்ஸ் 25ஏ, சாந்தராஜ் டேங்க் வீதி, திருச்சி–8 வாங்கி கொள்ள உத்தேச தோராய செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம்அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண்:733/அ3/2021)

**பொருள் எண்: 4**

ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தாய் சேய் நலவிடுதி கடை எண் : 07 வரி விதிப்பு எண்: 038/480 திரு. A.C. மணி என்பவர் கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து கடை வாடகை ஜனவரி– 2022 வரை தொகை முழுவதும் செலுத்தி மேற்படி கடை குத்தகைதாரர் நகராட்சி வசம் கடையை ஒப்படைத்து விட்டனர் ,எனவே வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி மேற்படி கடையின் வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து புதியதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேலும் குத்தகைதாரர் கடையை ஒப்படைத்த நாள் முதல் கேட்பினை கணினியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 256/அ3/2022)

**பொருள் எண்: 5**

ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தாய் பெரியார் மாளிகை கடை எண் : 27 வரி விதிப்பு எண்: 038/128 திருமதி.P.பிரித்தி என்பவர் கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து கடை வாடகை பிப்ரவரி 2022 வரை தொகை முழுவதும் செலுத்தி மேற்படி கடை குத்தகைதாரர் நகராட்சி வசம் கடையை ஒப்படைத்து விட்டனர் ,எனவே வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி மேற்படி கடையின் வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து புதியதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேலும் குத்தகைதாரர் கடையை ஒப்படைத்த நாள் முதல் கேட்பினை கணினியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 292 /அ3/2022)

**பொருள் எண்: 6**

ஆரணி நகராட்சி, திருவண்ணாமலை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள முதல் நிலை நகராட்சி ஆகும். **9.76** சதுர கி.மீ. பரப்பளவில் அமையப்பெற்றுள்ள இந்நகராட்சியின் **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியான மக்கள் தொகை **63671** ஆகும். ஆரணி நகராட்சி பட்டு நெசவுக்கும், அரிசி ஆலைகளுக்கும் பிரசித்தி பெற்ற நகரமாகும். ஆரணி நகரிலும் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமாா் **200** அரிசி ஆலைகள் அமையப் பெற்றுள்ளன. இந்நகராட்சி **33** வார்டுகளைக் கொண்டது ஆகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**18598/2021/தி2** நாள் **25.01.2022**ல் நமக்கு நாமே திட்டம் **2021–22**ன் கீழ் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கீழ்க்கண்ட பணிகளுக்கு மதிப்பீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **ஆரணி நகராட்சி வார்டு 02, கே.பி.கே நகர் சிறுவர் பூங்கா அமைக்கும் பணி.**<br>திரு.பிரபு தேவராஜ்,ஆரணி ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி ஆரணி கிளை வரைவோலை எண்.500130, நாள்.22.03.2022<br>தொகை ரூ.**8,17,000/-** | 24.50 |
| 2 | **ஆரணி நகராட்சி வார்டு 25,விநாயகர் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி**<br>திரு.சுப்பிரமணியன்,ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,ஆரணி கிளை வரைவோலை எண்.537122, நாள்.25.03.2022<br>தொகை ரூ.**3,58,333/-** | 10.75 |
| | **மொத்தம்** | **35.25** |

மேற்கண்ட மதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்ப, மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 175/2022/இ1)

**பொருள் எண்: 7**

ஆரணி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம்-2017-2018ன் கீழ் பின்வரும் பணி மேற்கொள்ள 20.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியினி விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | நவீன உடற்பயிற்சி கூடத்திற்கு தேவையான உடற்பயிற்சி உபகரணங்கள் விநியோகம் செய்தல் | 13.00 | திரு. s.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், காஞ்சிபுரம்.<br><br>திருமதி. s.உஷாராணி, ஒப்பந்ததாரர், ஆரணி. | 0.05%குறைவு<br><br>0.21%அதிகம் |

**அலுவலக குறிப்பு :-** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைவிகித்தைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. S.ஆறுமுகம், காஞ்சிபுரம். ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். மேலும், இப்பணி திட்டப் பணி என்பதால், தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண் 939/இ1/2017)**

## ஆரணி நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

2022–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2022–ந்தேதி திங்கட்கிழமை மாலை 4.00மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 388 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2 | 2 | 389 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 3 | 3 | 390 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 4 | 4 | 391 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 5 | 5 | 392 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 393 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 7 | 7 | 394 | அனுமதி வழங்கப்படுகிறது. |